**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# STC.NO- 264/2024

**Dated :20.02.2026**

**Deposition of witness for : D.W.2**

**Chief Examination of DW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது ஆரிப் | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | அகமது நசீர் | தாலுகா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது தஞ்சாவூர் மேல வஸ்தா சாவடியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு பூர்வீகம் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா, சுந்தம்பட்டி கிராமம் ஆகும். நான் கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து எதிரி நடத்தி வரும் விண்லேண்ட் புரோமோட்டர்ஸ் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னுடன் நமச்சிவாயம், ராஜேந்திரன், ஆறுமுகம், யோகராஜ் மற்றும் ஜாபர் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்கள். நாங்கள் மேற்படி நிறுவனத்திற்கு, இடம் வாங்கி, விற்பனை செய்து கொடுப்போம். மனை பிரிவினை அளந்து சரிசெய்து கொடுப்போம்.

2) புகார்தாரர் அக்கச்சிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். ஜாபர் மூலமாக புகார்தாரர் ராதா மற்றும் அவரது தாயார் சொத்தினை எதிரிக்கு கிரையம் கொடுத்தார்கள். அந்த இடம் கறம்பக்குடி சாலையில் மகாத்மா காந்தி நகரில் உள்ளது. ராதாவிடம் இருந்து 1 செண்ட் ரூ.33,500/- க்கு எதிரி கிரையம் பெற்றார். மேற்படி இருவரிடம் இருந்து 2010 ஆம் ஆண்டு நவம்பர்

மாதம் கிரையம் பெற்றார். எதிரியிடம் இருந்து ஜாபர் பணம் பெற்று ராதாவிடம் கொடுத்தார். எங்கள் தரப்பில் எதிரி, நானும் நமச்சிவாயம், ராஜேந்திரன், ஆறுமுகம், யோகராஜ் மற்றும் ஜாபர் ஆகியோரும் இருந்தோம். ராதாதரப்பில் அவரது கணவர் மற்றும் அவரது சகோதரர், உறவினர்கள் இருந்தார்கள். அந்த இடத்தை வாங்கி எதிரி மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்தார். அதில் நாங்கள் வேலையும் செய்தோம். இடத்தை விற்பனையும் செய்து கொடுத்தோம். மேற்படி நிறுவனத்திற்கு கந்தர்வகோட்டையில் அலுவலகம் இருந்தது. தற்போது தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ளது.

3) கடந்த 2 வருடங்களாக உள்ளது. (சாட்சி தற்போது 2010 ஆம் ஆண்டிலிருந்து தஞ்சாவூரில் அலுவலகம் இருந்ததாக கூறுகிறார்) கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை. ராதா அவரது தாயார் மற்றும் அவரது உறவினர்கள் தஞ்சாவூரில் உள்ள அலுவலகத்திற்கு வந்தார்கள். அங்கு பிரச்சனையானது. பணம் கேட்டார்கள். ஆவணம் பற்றி பேசிக் கொண்டார்கள். எதிரி அது சம்மந்தமாக புகார் கொடுத்தார். அதற்கு பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை.

**(**புகாதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.)**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.20 15:00:28 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**